**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஜனவரி 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 25 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019ஆம் ஆண்டுதிசெம்பர் 31 இல் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சபையின் JCB இயந்திரம் தண்ணீர் பவுசர் போன்றவற்றை வாடகைக்கு வழங்கியதன் மூலம் பெரவேண்டிர தொகை ரூபா 224,000 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டியவை இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு கணனித் தொகுதிகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கொள்வளவுகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வு பெற்ற, வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 214,603 கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | பொது மக்களுக்கு சபையினால் நீர் விநியோகித்த கட்டணம் ரூபா 428,161 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 104,438,304 தொகை பெறுமதியான 07 விடயங்களுக்கு காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள், மற்றும் இருப்பு பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான | சபையின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்காகவும் வேண்டி | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அக் குழுக்கள் கணக்காய்வுத் திகதியான 2019 மே10 ஆந் திகதி வரை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனித் தனி குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவீனம் என்பன வரவு செலவு திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின்செலவிலும் விஞ்சிய வருமானம் ரூபா 702,851 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தினை விஞ்சிய செலவினம் ரூபா 3,219,456 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,560,000 | 1,636,551 | 1,208,390 | 428,161 | 3,800,000 | 1,605.822 | 1,605,822 | - |
| வாடகைகள் | 3,925,000 | 3,336,627 | 3,129,127 | 207,500 | 4,197,000 | 1,753,339 | 1,723,726 | 29,612 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 815,000 | 703,140 | 703,140 | - | 717,000 | 647,070 | 647,070 | - |
| ஏனைய வருமானம் | 7,405,000 | 1,067,700 | 877,450 | 190,250 | 2,920,000 | 1,630,140 | 1,630,140 | - |
| மொத்தம் | 14,705,000 | 6,744,018 | 5,918,107 | 825,911 | 11,634,000 | 5,636,371 | 5,606,758 | 29,612 |

### 2.2.2 முத்திரைக் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 190,250 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | 2019 ஆம் ஆண்டில் மாகாண சபையிடமிருந்து நிலுவையாகவுள்ள அனைத்து முத்திரைக் கட்டணங்களையும் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும். | இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **உப விதிகள்**<br>1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் | சபையின் உப விதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், பிரதேச சபையினால் 2012 ஆகஸ்ட் 04 ஆம் திகதியில் சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்@ராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும்அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம்<br>------------------------------------<br>வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**
-------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ----------- | --------------------------- |
| (அ) | சபை நிதி ரூபா 875,000 தொகையின் முறைகேடான முறையில் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு முற்பணமாக வழங்கிய வகையிலும் போலியான முறையில் செய்யப்படாத வேலை ஒன்று செய்யப்பட்டதாக தொழினுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்பட்ட அறிக்கையினால் ரூபா 255,000 தொகையும் மற்றும் சபை இயந்திரத்தை அவருக்கு வாடகைக்கு வழங்கிய வகையிலும் ரூபா 244,000 தொகையும் சேர்த்து ரூபா 479,000 தொகை ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த பிடிக்காசு விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் அத் தொகையினை கவனயீனம் காரணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயலாளரிடம் இருந்தும் தொழில்நுட்ப உத்தியோகதத்ரிடம் இருந்தும் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியன் செலவில் ஆலங்குளம் என்னும் இடத்தில் கட்டப்பட்ட கடைத் தொகுதி பொருத்தமான இடத்தில் கட்டப்படாததினாலும் மின்சாரம், நீர் விநியோகம், சுற்றுமதில், மலசலகூட வசதிகள் என்பவை செய்யப்படாததினாலும் 8 கடைகளும் கடந்த 2 வருடங்களாக பூட்டப்பட்ட நிலையில் வருமானம் எதுவும் பெறப்படாது காணப்படுகின்றன. | குறிப்பிட்ட கடைத் தொகுதியை வருமானம் ஈட்டும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

## 3.3.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 99,391,166 கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அசையும் மற்றும் அசையா முலு சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 01 Bachoo Loader 01 Water Bowser, 02 உழவு இயந்திரம், சிறிய உழவு இயந்திரம் Mixer இயந்திரம், 02 உருளை இயந்திரம், 02 அதிர்வு இயந்திரம் 03 ஆண்டுகளுக்கு மேலாக திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய காலத்தில் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | களஞ்சிய அறையில் பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த | தொடர்புடைய சொத்துக்களை திருத்துவதற்கு அல்லது | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் திருத்துவதற்கு அல்லது அழித்து விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஏலத்தினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். | |
| (இ) | ரூபா 369,338 பெறுமதியான CANON – FX 600 கமரா 2016 இல் இருந்து பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. | குறிப்பிட்ட கமரா திருத்தப்பட்டு பயன்பாட்டிற்க்கு உட்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**3.4 பெறுகை**

--------------

**3.4.1 பெறுகைத் திட்டம்**

----------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------- | ----------- | ----------------------------- |
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லலை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------- | ----------- | ----------------------------- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

--------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------- | ----------- | ----------------------------- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |